DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 380/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 2(LW1)
Defence

Name : Neelamegan

Father Name /
Husband Name : Jayabalan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 2nd April 2026.

எதிரி ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது வானூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2025 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் திருமதி.மீனா தலைமையில் நான் மற்றும் த.கா.பாண்டியன் ஆகியோருடன மாலை 14.00 மணிக்கு

திருச்சிற்றம்பலம் கூட்ரோடு டூ திண்டிவனம் மெயின்ரோடு ஆகாசம்பட்டு ஜங்ஷன் அருகே ரகசிய தகவலின் பேரில் கண்காணித்துகொண்டிருந்தபோது வழக்கின் எதிரி அறிவழகன் என்பவர் ஒரு பிளாஸ்டிக் பையை வைத்துக்கொண்டு இருந்தவரை விசாரித்து பையை திறந்து காட்டசொல்லி பார்த்தபோது அதில் பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான mansion house french brandy 750ml- 1no, mansion house french brandy 375ml- 1no, 1848 premium XO brandy 750ml- 1no, 1848 premium XO brandy 375ml-1no, Old Monk XXX rum 750ml- 2Nos, பாட்டில்கள் இருந்தது.˙இதில் 1848 premium XO brandy 375ml-1no பாட்டில் மட்டும் மூடி திறந்து மூடிய நிலையில் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மேற்படி எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட mansion house french brandy 750ml- 1no, mansion house french brandy 375ml- 1no, 1848 premium XO brandy 750ml- 1no, 1848 premium XO brandy 375ml-1no, Old Monk XXX rum 750ml- 2Nos, , பாட்டில்களின் புகைப்படம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு ஆய்வாளர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.28/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) , 4(1)(C), 4(1)(A), TNP Amendment ACt எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசராணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரி பாண்டிச்சேரி மதுபானங்களை பேருந்தில் எந்த இடத்தில்வைத்து எடுத்துவந்தார் என்று அ.சா.1 விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆகாசம்பட்டு சந்திப்பு அதிக வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக அ.சா.1 விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் திண்டிவனம் பாண்டி சாலையில் சோதனை செய்தது போல் வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக அ.சா.1 விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

படிவம் 91ல் என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக அ.சா.1 தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- என்.பிரீத்தி,

நீதித்துறை நடுவர்,
வானூர்.